ஆரிய கலாசாரம் ஆணியடித்துக் காக்கப்படும்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1] சென்னை (27—12—49) வெளியீடு (28—12—49) [இதழ் 127

ஆளப் பிறந்தது அதுவொன்றேயென இந்துமகாசபை எக்காளம்!

—:0:—

ஓமகுண்ட வேதபாராயணத்தோடு இந்து சாம்ராஜ்யத்துக்கு மந்திராலோசனை!

—(0)—

'கனக - விசய - சாணக்கிய' குழாம் கல்கத்தாவில் கூடிற்று!

ஓமகுண்டலத்தில் மூன்று மணி நேரம் மகாயஜ்ஞம் நடக்க, பழுத்த பண்டித சிரோன்மணிகள் ஐம்பதுபேர் வேத பாராயணம் செய்ய, 'உலகக்ஷேமத்துக்கான பிரார்த்தனை' வேறு ஊடே நடைபெற, அகிலஇந்திய இந்து மகாசபையில் 28-வது மாநாடு, கல்கத்தாவில் டிசம்பர் 24-ந் தேதி காலை ஆரம்பமாகி, இடையில் ஒலிபெருக்கிக் கோளாறு மோசமான முறையில் நேரிட்டுவிடவே, அடுத்த நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டு, ஒரு விதமாய் முடிந்திருக்கிறது. மாநாட்டில் கலந்துகொண்ட சவர்க்கார், கரே முதலிய தலைவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் காட்டிலும், இந்து மகாசபை எத்தனையோ மடங்கு முற்போக்கு வாய்ந்ததென எடுத்துக் கூறி, இன்றைய ஆட்சியாளரின் நிர்வாகத் திறமையைச் சித்தரித்துக் காட்டி, அடுத்தத் தேர்தலுக்கு மகாசபை போட்டியிடப்போவதாக 'அங்குரார்ப்பன' சொற்பொழிவுகளாற்றி, தங்களது வர்ணாஸ்ரமப் பிற்போக்குக் கொள்கைகளையெல்லாம் 'கனகச்சிதமாகப்' பூசி மெழுகி வெளியிட்டு, ஆட்சிபீடம் ஏற வருகிறோம் நாங்களும்' எனக்கச்சை கட்டி ஆடி மகிழ்ந்திருக்கின்றனர்!

"இந்து மகாசபை மீண்டும் அரசியலில் ஈடுபட்டு, இந்து கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதொரு அரசியலை அமைப்பதற்காக அடுத்து வரவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போகிறது.

இந்துக்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேர்களாக இருப்பதாலும், அவர்களுடைய கலாசாரம் இந்த கலாசாரமாக இருப்பதாலும், இந்நாட்டில் வேறு எந்த கலாசாரத்துக்கும் இடங்கொடுக்கக் கூடாது. இந்து கலாசாரம் அல்லது ஆரிய கலாசாரம் தான் இந்நாட்டில் இடம்பெற வேண்டும். இந்து ராஜ்யம் ஏற்பட இடந்தரமாட்டோம் என்று காங்கிரஸ் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்து ராஜ்யமும் வேண்டாம் இந்து அரசாங்கமும் வேண்டாம். ஏற்கனவே இந்நாட்டில் 'இந்து ராஷ்ட்ரா' இருந்து வருகிறது. அதனை அழிக்க இந்த உலகில் எந்த சக்தியாலும் முடியாது."

இது, அகில இந்திய இந்து மகாசபை மாநாட்டில் டாக்டர் என். பி. கரே பேசியுள்ள பேச்சு.

இந்நாட்டில் ஆரிய ஆதிக்கம் தலை தூக்கி திராவிட பண்பாடுகளை அழிக்க முயல்கிறது என்று, நாம் பலதடவைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். நமது இந்தக் கூற்றை எதிர்த்தவர்கள் இட்டோர் பலர், எள்ளி நகையாடியோர் ஏராளம், கண்டித்தோர் கணக்கற்றோர். அப்படிப்பட்ட அன்பர்களுக்கெல்லாம் மேலே தரப்பட்டிருக்கும் டாக்டர் கரேயின் பேச்சுகளை அப்படியே அர்ப்பணம் செய்கிறோம்.

இந்திய அரசாங்கம் மதச் சார்பற்றது, இங்கு இந்து ராஜ்யம் ஏற்பட இடந்தரோம் என்றெல்லாம் இடைவிடாது பேசுகின்றனர் காங்கிரஸ் தலைவர்கள். ஆனால், அப்படிப் பேசும் தலைவர்களையும் மீறி, ஒரு பெருஞ்சக்தி வேலை செய்கிறது இந்நாட்டில் என்பதற்கு, இந்த இந்து மகாசபை ஒரு எடுத்துக் காட்டாகும்.

மாநாட்டுத் தலைவர் என்ற

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

நெல் உற்பத்திப் பெருக்கத்திற்கு ரசாயன எருக்கள்

பிரிட்டிஷ் பேராசிரியரின் ஆராய்ச்சி

லண்டன், டிச. 26—

நெல்லை ஏராளமாக விளையச் செய்ய எந்த ரசாயன எருக்களை, எப்படி உபயோகிக்க வேண்டும் என்ற ஆராய்ச்சிகளை, லண்டன் பல்கலைக் கழகத், தாவரப் பேராசிரியர் பியார்சல் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்.

அவர் கூறியிருப்பதாவது:- தண்ணீர் தேக்கமுள்ள நிலங்களில், பிராணவாயு எவ்வளவுக்கு நிலவியிருக்க முடியும் என்பது கண்டுபிடிக்க வேண்டும். நைட்ரோஜன் எருக்களை பலனில்லாமல் செய்துவிடக் கூடிய சில அம்சங்களை பூமி சத்தில் இருக்கின்றன. அமோனியம் ஸல்பேட் எருவை உபயோகிக்கும்போது நைட்ரோஜன் அந்த அம்சங்களால் பாதிக்கப்பட்டு, பயிர்களுக்கு நன்மை தராமல் ஆவியாகப் போய்விடுகின்றன.

இந்த அம்சங்கள் பிராணவாயுவினால்தான் உயிர்பெற்று இருக்கின்றன. ஆகவே பிராணவாயுவே அங்கில்லாதபடி செய்தால்தான், அமோனியம் ஸல்பேட் உபயோகத்தால் பலன் காணமுடியும். எவ்வளவு பிராணவாயு பூமி சத்தில் இருக்கிறதுஎன்பதைக் கண்டுபிடிக்கக் கருவி இருக்கிறது. இதன் மூலம் கண்டுபிடித்து, அதைவெளிப்படுத்த முடியும்.

பேராசிரியர் பியர்சல் குளோப் நிருபரிடம் கூறியதாவது:- இம் மாதிரி இந்தியாவில் செய்யப்பட வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை, ஏனெனில் இந்தியாவிலுள்ள பூமி சத்து நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம், பூமியை ஆழ உழும்போதே இந்த ரசாயன எருக்கள் அடிவரையில் போகும்படி செய்து விடுவது மிகவும் நல்லது.

சோடா நைட்ரேட் எருவை பயிர்கள் வளர்ந்த பின் போட்டாலும் பலன் இருக்கும் ஏனெனில், இதில் நைட்ரோஜன் மிகவும் அதிகமாக இருப்பதால், ஓரளவு ஆவியாகப் போய்விட்டாலும் பயிர்களுக்கு பலன் தர நைட்ரோஜன் கிடைக்கும்.

பியர்சல் ஆராய்ச்சி முடிவை அந்தந்த இடங்களிலுள்ள பூமி சத்துக்களின் தரத்தை அறிந்துஅனுசரித்தால், பலன் பெறலாம் என்று கூறப்படுகிறது.

எஞ்ஜினியரிங் கல்லூரி பொருட்காட்சி

சென்னை, டிச. 26—

கிண்டி எஞ்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற விருக்கும் 5-வது எஞ்ஜினியரிங் 2-வது கல்வி பொருட்காட்சியை 29-ந் தேதி மாலை 5-30 மணிக்கு இந்திய சர்க்கார், மராமத்துமந்திரி தோழர் என். வி. காட்கில் திறந்து வைப்பார்.

இவ்வாண்டு பொருட்காட்சியைச் சிறப்பிக்க பல புது அம்சங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் நாடகம் முதலிய பயிற்சி இவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இடைக்கால பார்லிமெண்டில் ஆதித்திராவிடர்க்கு நியாயமான பிரதிநிதித்துவம்

தீண்டாமை யொழிப்பு விதிகள் உடனடி அமுல் பெறவேண்டும்

பண்டித நேருவிடம் தூதுக்குழு

அகிலஇந்திய ஒடுக்கப்பட்டோர் லீக் டிச. 24-ந் தேதியன்று இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேருவை சந்தித்து, விண்ணப்ப மனுவொன்றை அவரிடம் தந்தது. இந்தியாவின் இடைக்கால பார்லிமெண்டில் ஆதித்திராவிடர்க்கு மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்வம் வழங்க வேண்டுமென்றும், தீண்டாமை யொழிப்புக்கான விதி முறைகளை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் லீக் கேட்டுக்கொண்டது. ஆதித் திராவிடருடையவும், பிற்பட்ட வகுப்பாருடையவும் சிவில் உரிமைகள் அதிவிரைவில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொணரப்படுமென்பதற்கு உறுதி வழங்கப்பெற வேண்டுமென்றும் விண்ணப்பத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆதித்திராவிடர் முன்னேற்ற இலாகாவொன்று தனிபாக மத்தியில் இடம்பெற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

லீகின் கோரிக்கைகள் அத்தனையும் [illegible]து சர்க்காரால் கவனிக்[illegible]டுமென பண்டித நேரு வாக்களித்தார். தோழர் காண்டேகர் தலைமையில் தோழர்கள் ஆர். எம். நால்வதே, எஸ். நாகப்பா, குப்ராம் ஜஜோரியா, இ. கண்ணன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர் மேற்படி தூதுக்குழுவில்.

மலேயாவுக்கு இந்திய ஏற்றுமதி அதிகரிப்பு

மலேயாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் அக்டோபர் மாதத்தில் மிகவும் அதிகரித்திருக்கிறது என்று தெரியவருகிறது. மலேயாவுக்கு இந்திய ஏற்றுமதிப் பொருள் ரூ. 10777000 க்கும் இந்தியாவில் மலேயாவிலிருந்து இறக்குமதி ரூ. 5012800 க்கும் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியா அனுப்பிய பொருள்களில் பெரும்பாலும் ஜவுளிகளே. மலேயாவிலுள்ள இந்திய வர்த்தக கமிஷனர் தோழர் ஜோசேப்பிடம் ஏற்றுமதி அதிகரிப்புக்கு காரணம் இந்திய ஜவுளிகள் வேறு எந்த நாட்டு ஜவுளிகளையும்விட மலிவாக இருப்பதுதான் என்று கூறினார்.

டாலர் ஆதிபத்தியம் வலை வீசுகிறது!

—:(0):—

ஆசியா, ஆப்பிரிக்காப் பகுதிகளில் நெல் விளைவிக்கும் திட்டங்கள்

பாரிஸ் டிச. 27—

ஆசியாவில் அரிசி விளையுபடியான புது பிரதேசங்களை ஏற்படுத்த, மார்ஷல் உதவித் திட்டமைக் காரியாலயம் திட்டம் வகுத்திருப் பதாகத் தெரியவருகிறது.

இத்திட்டம் அடுத்த மாத புஜெட் ஸ்டேட்ஸ் சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதாம். இப்புதுத் திட்டம் ட்ரூமன் போட்டிருக்கும் உதவித் திட்டத்தின் மூலம் அமுல் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இதன்படி ஆசியா, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல் ஆகிய பிரதேசங்களில் அரிசி விளையும்படி செய்ய விசேஷ நடவடிக்கைகள் எ[illegible]படும்.

மாலை மணி

சென்னை 27—12—49 செவ்வாய்க்கிழமை

அனுபவமற்ற அலங்கோல ஆட்சி

"அனுபவம் இல்லாதவர்கள் கையில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது ஆபத்தானது"

என்ற நன்னெறி விளக்கத்தை நவின்றுள்ளார் அன்பர் ஆச்சாரியார், அவுரங்காபாத் ஜில்லா நகரசபைகள் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கும் போது. அன்பர் ஆச்சாரியார் இந்த அறிவுரையை வழங்குவதற்கு முன்பே, நாட்டு மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள், அனுபவமில்லாதவர்கள் கையில் ஆட்சி ஒப்படைக்கப் பட்டால், அது எவ்வளவு ஆபத்தானதாக இருக்கும் என்பதை. பொதுவாக மத்திய அரசாங்க ஆட்சியும், குறிப்பாகச் சென்னை மாகாண ஆட்சியும் நடத்திக்காட்டிவரும் செயல்களிலிருந்து, அந்த உண்மையைத் தெளிவாக அறிந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

அனுபவமற்றவர்கள் ஆட்சியில் இலட்சியம் இருப்பதில்லை திட்டமும் இருப்பதில்லை; தாறுமாறாகச் செயலாற்றும் ஆணவ மனப்போக்கு அளவுக்கு மீறி இருந்து விடுகிறது. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருந்து வருவது சென்னை மாகாணக் காங்கிரஸ் அரசாங்கம் என்றால் அது மிகையாகாது.

அறிவுரை கூறிய ஆச்சாரியார், அழகுமொழி பேசி இந்திய அரசாங்கத்திற்கு தாங்குதல் கொடுக்க முயலுகிறார், வழக்கமான சாணக்கிய தந்திரத்தைக் கையாண்டு, **"இந்திய சர்க்காரை அனுபவமும், அறிவும் முதிர்த்த தலைவர்கள் நடத்திவருவது நம் அதிர்ஷ்டமே"** என்பதுதான் அவரது அழகுமொழி, டாக்டர் அம்பேத்கார் போன்ற ஒரு சில அனுபவசாலிகள் இந்திய ஆட்சிப்பீடத்திலிருக்கிறார்கள் என்றாலும், அனுபவமற்ற பெரும்பான்மையர் செய்து வரும் தாறுமாறான செயல்கள் ஆச்சாரியாரின் கூற்றை மறுப்பனவாக இருக்கின்றனவேயன்றி, அவர் கூற்றுக்கு ஆதரவு தருவதாக இல்லை. தோழர் ஆச்சாரியர் கவர்னர் ஜெனரல் என்ற முறையில் அப்படிக் கூற நேர்ந்தது என்றால், அந்த அவசியத்தை அரசியல் தந்திரத்திலே ஒன்றாகத்தான் கொள்ள வேண்டி நேரிடுமேயல்லாது உண்மை நிலையை உணர்த்தியதாகக் கொள்வதற்கில்லை. [illegible] உண்மையை ஆளுங் கட்சியார்க்கு எதிராகவுள்ள கட்சியினர் எடுத்துக் கூறுகிறார்கள் என்று மட்டும் எண்ணத் தேவையில்லை! ஆளும் கட்சியாரைச் சேர்ந்தவரும் ஆளும்கட்சியின் தலைவராக விளங்கியவருமான தோழர் கிருபளானியே சுட்டிக்காட்டுகிறார்.

அன்பர் ஆச்சாரியார் புகழ்ந்து கூறும் அளவுக்கு உண்மை நிலை இடங்கொடுக்கவில்லை. என்பதைத் தோழர் கிருபளானி, **"சர்க்கார் பரீட்சார்த்தக் கொள்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர் ஆனால் சர்க்காருக்கு இலட்சியம் என்பது ஒன்றிருந்தால் தான், இவற்றில் வெற்றிகாண முடியும். இந்த சர்க்காருக்கு இலட்சியம் என்பதே கிடையாதே."** என்ற சொற்களால் தெளிவு படுத்திவிட்டார் இதைவிட வேறு சான்று என்ன வேண்டும். ?

தோழர் ஆச்சாரியாரும்—தோழர் ஆச்சார்ய கிருபளானியும் நேருக்கு நேர் எதிரெதிராகச் சந்திக்கின்றார்கள். விசித்திரநிலை' இத்தகைய விசித்திரங்கள் ஏராளமாக எப்பொழுதும் நிகழ்ந்து வருகின்றன. காரணம் இலட்சியம் அற்ற—அதற்கேற்றத் திட்டம் அற்ற-அனுபவம் அற்ற—ஆளுந் திறமையற்றவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பதேயாகும். இவ்வுண்மையை ஆச்சாரியார் மறைக்கப்பார்க்கிறார்; ஆச்சார்ய கிருபளானி வெளிப்படுத்தப் பார்க்கிறார்.

நாட்டின் எதிர்காலம் நலமுற ஆச்சாரியாரும் வழி கூறுகிறார்; கிருபளானியும் வழி காட்டுகிறார்; இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் தாம்!

"தலைவர்களிடம் நம்பிக்கை கொள்வதே மக்கள் செய்யக்கூடிய விவேகமான செயலாகும்"—இது ஆச்சாரியார் கூறும் வழி.

'இன்றைய சர்க்கார் நல்லாட்சி புரிந்தால் புரியட்டும்; இன்றேல் ஏனையோர்க்காவது இடமளித்துவிடட்டும். இந்த இரண்டைத்தவிர வேறு வழியில்லை: நல்லாட்சி புரியுங்கள். இன்றேல் வெளியேறுங்கள்".- இது கிருபளானி காட்டும் வழி. தோழர் ஆச்சாரியார் மக்களைத் திருத்தச் சொல்கிறார் இரண்டும் எது நடைபெறவேண்டும்? உண்மை நிலையை உணர்ந்து பார்த்தால், மக்கள் அல்ல திருத்த வேண்டியவர், மந்திரிகளே என்பது தெளிவுபடும்.

மக்கள் வைக்க வேண்டிய அளவு நம்பிக்கையை ஆளவந்தார்களிடத்தில் [illegible] வைத்து தான் வந்தார்கள் அதில் எவ்வித குற்றமும் காங்கிரஸ்காரர்களே சொல்லவில்லையே! மக்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள். ஆனால் மந்திரிகள் தங்கள் கடமையை மறந்தார்கள்! அனுபவம்-அற்ற—இலட்சியம் அற்றவர்கள் தான் ஆட்சியில் ஏற்பட்டிருக்கும் அலங்கோலத்திற்கு முக்கிய காரணம் என்பதற்கு, சென்னை மந்திரி மாதவ[illegible] ஒருவரே போதுமான எடுத்துக் காட்டாவாரே!

ஆட்சிப் பீடத்திலிருக்கும் அனுபவமற்ற—ஆணவம் மிகுந்த 'அவ லட்சணங்கள்' அகன்று, அரசியல் அமைப்பை அறிவு வழி நடத்திச் செல்ல முனைவோர்க்கு, இடமளிக்கப்பட்டால், நாடு எவ்வளவோ தூரம் முன்னேற வழியேற்படும் என்பது திண்ணம்

அறிவும்ஆற்றலும்படைத்தோர் குறுகிய காலத்தில்கூட அனுபவம் பெற்றுவிட முடியும் இன்றைய ஆளவந்தார்களில் பலருக்கு அந்த வாய்ப்பும் வழி அமைப்பதாக இல்லை போலும்!

அனுபவமற்றவர்களின் கையில் ஆட்சி வந்தால் அது ஆபத்தாக முடியும் என்பதை இன்றைய ஆளவந்தார்கள் எப்படியோ நிரூபித்துவருகிறார்கள். முன்னாள் பிரதமர் தோழர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள், அண்மையில் ஒரு மாநாட்டில் குறிப்பிடும் போது, "போதிய பக்குவம் அடைவதற்கு முன்பே நாம் சுயாட்சி பெற்றுவிட்டோம்" என்று கூறியிருப்பது, இன்றைய ஆட்சியாளரின் அனுபவமற்றத் தன்மையைத் தெளிவு படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

ஆகவே, இன்றைய ஆட்சியாளர்களின் அலங்கோல ஆட்சிக்கு ஆச்சாரியார் கூறுவது போன்று மக்களிடத்திலேஉள்ள நம்பிக்கையற்றத் தன்மையல்ல காரணம், ஆச்சார்யகிருபளானியார் கூறுவது போன்று மந்திரிமார்களின் இலட்சியமற்ற அனுபவமற்றத் தன்மையே காரணமாகும்!

எனவே. உள்ள நிலையையறிந்து, கிருபளானி கூறுவது போன்று. அனுபவமற்ற அலங்கோல ஆட்சியை மாற்ற இண்டிலொன்று புரிய இன்றைய ஆளவந்தார்கள் முன் வருவார்களா?

அறிவுக் கதிர்!

சோதிடத்தில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டுமானால், அதனை விஞ்ஞான முறைப்படி ஆராய்தல் வேண்டும். சோதிடர்கள் குழப்பமான ஒரு கணக்கைக் கொண்டே எதையும் கணிக்கிறார்கள் குருட்டுக் கணக்கில் அவர்களுக்கு நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, சோதிடத்தை ஆராய முதன் முதலில் வேண்டப்படுவது சரியான கணக்கு. இதன் பிறகு அந்தக் கணக்குப்படி பலாபலன்கள் நிகழ்கின்றனவா என்பதை புள்ளி விவரங்களோடு அலசி ஆராய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் தான் உண்மை நிகழ்ச்சியைவிட கூட்டு நிகழ்ச்சி அதிகமா என்ற உண்மை தெரியவரும். இது முற்றிலும் அவசியமில்லாவிட்டாலும், மனிதனை நட்சத்திரங்கள் எப்படி இயக்குகின்றன என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டுவது அவசியமாகும்.

—ரகுநாத் பராஞ்சிபே.

படைவீரர் உணவு உற்பத்தி இயந்திரம்

சென்னையிலு[illegible] சென்னை கருகிலும் முகாம் அமைத்துக் கொண்டிருக்கும் இராணுவப் படையினர் உணவு உற்பத்தி பெருக்க இயக்க வேலைகளில் நிறைந்த கவனஞ் செலுத்திவருகின்றனர். இராணுவத்தலைமை நிலையம் இவ்வியக்கத்தை தவக்கியிருக்கிறது. [illegible] மேற்படி படை வீரர்கள் 100 ஏக்கர் நிலத்தை சாகுபடியின் கீழ் கொண்டுள்ளனர் நெல், ராகி, சோளம், [illegible] வள்ளிக்கிழங்கு பல ரகங்களில் கறிகள் இன்னபிற சாகுபடி செய்யப்பட்டுள்ளன இதுவரையில் 2?0 டன் தானியங்களும் காய்கறிகளுமாக ரூ. 20 000 மதிப்புள்ள உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

28–12–49

பண்ணபடிப்பட்டி :— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி

29–12–49

ஆவுடையானூர் :— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி

30–12–49

உறையூர் :— சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன்.

ஆரிய கலாசாரம்...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

முறையிலே டாக்டர் [illegible] ரால்துபிரர், ஆரிய, கலாசாரத்தைப்பற்றி வேறிரந்த கலாசாரமும் இந்நாட்டில் தழைக்காது என்று. எனவே, ஆரிய ஆணவம் இந்த அளவில் இருக்கிறது என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு என்ன தேவை! ஆரியமாவது திராவிடமாவது, அதெல்லாம் இந்தக் காலத்தில் ஏது" என்றெல்லாம் சர்வ சாதாரணமாக இன்னை வேதாந்தம் பேசும் நேர்களைக் கேட்கிறோம். "ஏ, நேர்களே சமத்துவப் பிரியர்களே, தேசியவாதிகளே, பரந்த மனப்பான்மை, பரந்த மனப்பான்மை என்று மறைசாற்றித் திரியும் தன்னிலை அறியாத தம்பிரான்களே இதற்கென்னபதில் சொல்லுகிறீர்கள்?";

நல்லவேளையாக டாக்டரே இம்மாதிரியான பேச்சை விந்தியமலைக்கு வடக்கே இருந்து கொண்டு பேசினார். அதற்குத் தெற்கே சென்னை மாகாணத்தில், அதாவது, திராவிட நாட்டில் இத்தகைய பேச்சை பேசியிருப்பாரானால், அதே கூட்டத்தில் 'ஆரியம் ஒழிக" 'திராவிடம் வாழ்க" என்ற பேரொலி எழுந்து கரோனாத் திக்குமுக்காடச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, ஆரிய-திராவிட பிரச்னையை இனியாரும் அலட்சியமாகவோ, வேண்டாத பிரச்னையென்றோ கருதத் தேவையில்லை. 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய ஒலியை இன்னும் சற்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் உண்டுபண்ணி விட்டது கல்கத்தா மாநாடு.

ஆரியம், இந்துமகாசபை என்ற புதுயிர் பெற்றுமனளிவர ஆரம்பித்துவிட்டது. தேர்தலில்போட்டியிட்டும் போடுகிறது. ஆரிய கலாச்சாரத்தை [illegible] [illegible]

"நம் காலப் பெரும் பதின்மர்"

காந்தியாருக்கு முதலிடம்

கனேடிய மாத வெளியீடு, 'மக்லீன்ஸ் மேகஸின்'—நூற்றாண்டு மத்திப் பதிப்புக்குப் பேராசிரியர் ராபர்ட் டி. ஹாகின்ஸ் (கிசாகோ பல் கலைக்கழகம்) தயாரித்திருக்கும் "நம் கால பெரும் பதின்மர்" என்ற கட்டுரையில் தோழர் காந்தியார் முதலிடம்பெறுகிறார். மூன்று அமெரிக்கப் பெரியார்கள், பிரிட்டன், ரஷ்யா, சீனா, இந்தியா, ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒவ்வொருவர் மேற்படி பதின்மர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். பெரியவரொருவரின் செல்வாக்கு ஆழம், நம் எண்ணத்தையும் வாழ்வையும் மாற்றக் கூடிய வல்லமையிலான அச்செல்வாக்கின் பெரும் பலன்-இவற்றை அடிப்படையாகக் கொண்டே, மேற்படி பதின்மரைத் தேர்ந்தெடுத்துள்ளார்பேராசிரியர் ஹாகின்ஸ்.

'கடந்த இரண்டாயிரமாண்டுகளில் கிறிஸ்துவைப் பெரிதும் ஒத்துக் காணப்படுபவர் காந்தியே யாகையால்' அவருக்கு முதலிடம் தரப்படுகின்றதாம்.

சர்ச்சில் ஆறாவது இடத்தைப் பெறுகிறார்—ஆணழகு, [illegible], சொற்றிறன் இவற்றால் சிறந்திருப்பாராம் சர்ச்சில்.

திருமதி ரூஸ்வெல்ட் தனது கணவர் [illegible]க்கு மேலே மூன்று பேர்களுக்கு முன்னதாகவே இடம் பெற்றிருக்கிறார். 'உலகப் பெண்[illegible] வருக்கும் நம்பிக்கை நட்சத்திரமாகவும், [illegible] முட்டும் சின்னமாகவும் திகழ்கிறார் திருமதி ரூஸ்வெல்ட்' என்று கூறப்பட்டிருக்கிறது.

பேராசிரியர் ஐன்ஸ்டீன், பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்—சிந்தனையாளர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் இவரே பெருஞ் சிந்தனையாளரெனக் குறிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் தத்துவப் பேராசிரியர் ஆல்பெர்ட் ஷ்வெயிட்ஸர், லெனின், சன்யாட்சென், ஹென்றி போர்டு ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர் இப்பட்டியலில்.

இந்திய ரயில்களுக்கு எஞ்சின்கள்

இந்திய ரயில்வேக்களுக்கு 36 எஞ்சின்கள் (பிராட் கேஜ் மாடல்) [illegible] 24-ந் தேதி [illegible] சென்னைத் துறைமுக[illegible] இவற்றுள் 12 எம் எஸ். எம். ரயில்வேயுக்கும், 19 தென் [illegible] ரயில்வேயுக்கும், 5 இ[illegible] ரயில்வேயுக்கும் [illegible] கிடைக்கும்.

கழக நடவடிக்கைகள்

கோலார் தங்கவயல் :— இவ்வூர் கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் 17—12—49 ல் நடைபெற்றது. அதுபோது, இக்கிளையின் துவக்க விழாவை 20-1-50க்குள் தோழர்கள் சி. என். அண்ணாதுரை சி. பி. சிற்றரசு ஆகியோரை அழைத்து நடத்துவதென்றும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* * *

சென்னை :-கிருஷ்ணாம்பேட்டை தி. மு. கழகக் கிளையின் சார்பில் 4-12-49-ல் நடைபெற்ற கூட்டத்தின் வரவு செலவுக் கணக்கு:- மொத்த செலவு ரூ. 59-7-0; நன்கொடை வரவு ரூ. 32-0-0; வரவுக்குமேல் செலவானது ரூ. 27-7-0 இத்தொகை கழக நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டது.

* * *

தாராபுரம் :— இவ்வூர் கிளையின் செயற்குழுக்கூட்டம், 18-12-49-ல் நடைபெற்றது. அதுபோது சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்பு, இவ்வூர் சுயமரியாதைத் தோழரும், தி. மு. க. அனுதாபியுமான தோழர் வி. சம்பந்தம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் ஜானகி அம்மையார் அகால மரணமடைந்ததற்கு ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிந்தது.

* * *

திருவண்ணாமலை: இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 17—12—49-ல் கூடியது. அதுபோது, கழகத் துவக்க விழாவின் வரவு செலவுக் கணக்கு பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

மொத்த வரவு ரூ. 45-0-0; விழாச் செலவு ரூ. 30-4-9 மீதியிருப்பு ரூ. 14-11-3 யை நிதி உறுப்பினர் தோழர் மு. ர. தேவராசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்த பொதுக் கூட்டத்தை தோழர்கள் க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத் ஆகியோரைக் கொண்டு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. சின்னக்கடைத் தெரு, அய்யங்குளத் தெரு, பெரிய கடைத்தெரு திண்டிவனம் ரோடு ஆகிய இடங்களில் தி. மு. க. கொடியேற்றுவிழா நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. கழக நன்கொடை வசூல் செய்ய தோழர்கள் ப. உ. சண்முகம், ரா. [illegible]லிங்கம், அ. சந்திரன், ரா. தேவராசன், ரா. சண்முகம் ஆகியோர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. (வி-உ)

* * *

[illegible]ப்பூர்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 17-12-49 அன்று புதுவை போலீஸ் பயிற்சிப் பள்ளிக்கு அருகிலுள்ள மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. சுந்தரம் தலைமை வகித்து "தமிழர் பண்பு" என்பதைப்பற்றி முகவுரையாகப் பேசினார். பின்பு அதே பொருள் பற்றி தோழர்கள் [illegible], என். சுவாமிநாதன், ஜே. பி. ஐசக், எம். என். [illegible], எம். மாணிக்கம், என். வி. குமாரசாமி ஆகியோர் விரிவுரையாற்றினர். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

புதுக்கோட்டை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 18—13—49-ல் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் அ. பெரியண்ணன், க. ஞானமூர்த்தி ஆகிய இருவரும் திருச்சி மாவட்ட கழகத்திற்கு புதுக்கோட்டைக் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி மாவட்ட மாநாட்டிற்கு ரூ. 100 வரை பணம் சேர்த்து அனுப்புவதென்றும், அம்மாநாட்டு விஷயாலோசனைக் கூட்டத்திற்கு தோழர் முருகு. சுப்பிரமணியம் அவர்களை அனுப்பி வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தோழர் அய்யாமணியின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் இடத்திற்குத் தோழர் கே. கோபால் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாதம் ரூபாய் ஒன்றுக்கு மேல் கொடுக்கக்கூடியவர்களின் பட்டியல் ஒன்று தயார் செய்யப்பட்டு, ஜனவரி முதல் வசூல் செய்யும் பொறுப்பை துணைச் செயலாளருக்குக் கொடுக்கப்பட்டது.

தோழர்கள் ஆசைத்தம்பி, மு. கருணாநிதி இருவரையும் அழைத்து 8—1—50-ல் ஓர் கூட்டம் நடத்துவதென்றும், 8—1—50-க்குள் கழகத்திற்கு ஓர் இடம் தேடித் தரும் பொறுப்பை தோழர்கள் [illegible]ராசன், முத்துவேல் இருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (வி உ)

* * *

சிதம்பரம்— இந்நகர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 18-12-49-ல் தோழர் இரெ. பாலகுரு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, ஜனவரி மூன்றாவது வாரத்தில் பொதுச்செயலாளரை அழைத்து கூட்டம் நடத்தவேண்டியிருப்பதால், நிதி வசூலில் உறுப்பினர்கள் முயற்சி செலுத்த வேண்டுமென்றும், செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ 10-க்கு குறையாமல் வசூல் செய்ய வேண்டுமென்றும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* * *

திருவனந்தபுரம் :— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 18 12 49 ல் தோழர் பி. எஸ். மணி தலைமையில் [illegible] கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் டி. வி. சிவன், எ. செட்டியன், எ. நடராசன் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துப் பேசினர். பின்பு தோழர் ஈ. கே. சீனிவாசன் அவர்களைக்கொண்டு ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (வி-உ)

* * *

அருப்புக்கோட்டை :— இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 18—12—48ல் செயலாளர் தோழர் ச. காளிமுத்து தலைமையில் 18—12—49ல் கூடியது. அதுபோது, தோழர் சி. என். அண்ணாதுரை காஞ்சி கல்யாணசுந்தரம். ஈ. வெ. அ. வள்ளிமுத்து ஆகியோரை அழைத்து 3—1—50 கழகத் துவக்க விழாவை நடத்துவதென்றும், நகரின் நான்கு திசைகளிலும் முக்கிய இடங்களில் கழகக் கொடியை ஏற்றுவிப்பதென்றும், செயலுறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நூற்றுக் கணக்கான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

* * *

திருப்பூர்:—இவ்வூர் திராவிட முன்னேற்ற இளைஞர் கழகத்தின் சார்பில் 20—1—49 இவ்வூர் ஜெயலட்சுமி தியேட்டரில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, நகரசபைத் தலைவர் கே. ஆர் இராமசாமி அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் ஓர் வரவேற்பு மடல் படித்தளிக்கப்பட்டு மாலை மணிவிக்கப்பட்டது. (செ—ர்)

இராமநாதபுர மாவட்டக் கிளைக் கழக நிர்வாகிகளுக்கு

தோழர்களே !

3—1—50ல் அருப்புக்கோட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் சொற்பொழிவாற்ற, தோழர் சி என் அண்ணாதுரை அவர்கள் வருகிறார்கள்.

அதே சமயத்தில் இராமநாதபுர மாவட்டக் கழகத்தையும் அமைத்துவிட எண்ணியுள்ளேன். எனவே, அருள்கூர்ந்து மாவட்டக் கழகச் செயற்குழுவுக்காக, ஒவ்வொரு கிளைக் கழகத்திலிருந்தும், இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்புவதுடன், மாவட்டக் கழகத்திற்குச் சேரவேண்டிய சந்தா அச் சீட்டுடன் 3—1—50 ல் பகல் 12-மணிக்குள் அருப்புக் கோட்டை தியாகராஜ விலாஸ் சத்திரத்தில் அண்ணா தலைமையில் நிகழும் மாவட்டக் கழக அமைப்புக் கூட்டத்திற்கு, பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுகிறேன்.

எம். எஸ். இராமசாமி,
மாவட்டக் கழக அமைப்பாளர்
அருப்புக்கோட்டை.

பாரதிதாசன் படிப்பகம்
சிதம்பரம் நகர்

சென்னை, டிச 26—

ஷை படிப்பகம் 1-2-49ல் துவங்கி தன் பணியைச் சிறப்புடன் ஆற்றி வருகிறது. தாழ்ந்த மக்களின் நிலையை உயர்த்தவும் பழமையை நீக்கிப் புதுமையை வளர்க்கவும், பகுத்தறிவைப் பரப்பவும் படிப்பகம் மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. இனிமேல் படிப்பகம் மேலும் வளர நீங்கள் நன்கொடை அளிப்பதுமல்லாமல் உறுப்பினராகவும் சேரும்படி மன்றுடிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. கீழ்க்கண்டவாறு:—

நன்கொடைச் சீட்டின் பொங்கற் பரிசுகள் வழங்கப்படும்

முதல் பரிசு 1. பாரதிதாசன் கவிதைகள் I. 2. பாரதிதாசன் ,, II, 3. திராவிடப் பாடல்.

இரண்டாம் பரிசு பாண்டியன் பரிசு.

மூன்றாம் பரிசு 1. புரட்சிக்கவிஞர் தொகுப்பு, 2. கவிஞர் படம்.

நான்காம் பரிசு குடும்ப விளக்கு I, II, III,

5ம் பரிசு 1. கடற்மேற் குமிழிகள், 2. காதல் நினைவுகள்.

6ம் பரிசு 1. நல்ல தீர்ப்பு, 2. இருண்ட வீடு.

7ம் பரிசு 1. எதிர்பாராத முத்தம்.

8ம் பரிசு காதலா கடமையா

9ம் பரிசு சேரத்தாண்டவம்

10ம் பரிசு தமிழச்சியின்கத்தி.

குறிப்பு:— 12—1—50 வியாழன் மாலை 6-30 மணிக்கு எண் 81 பெருமாள் முதலித்தெரு சிதம்பரம் நகர, சென்னை என்ற இல்லத்தில் பரிசுகள் தேர்ந்தெடுக்கப்படும் எனத் தோழர் ஆ. மணிமன்னன் (செயலாளர்) எழுதுகிறார்.

கம்யூனிஸ்டு சீனாவுக்கு பர்மிய அரசுப்பிரதிநிதி

ரங்கூன், டிச, 26—

பர்மா இப்பொழுது கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரித்துவிட்டதால், முன்பு சீனாவில் பர்மிய அரசப் பிரதிநிதியாக இருந்த [illegible] திரும்பவே மீண்டும் பீகிங்கிற்கு அரசப் பிரதிநிதியாக பர்மா சர்க்கார் அனுப்பவிருக்கிறது

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

1-1 1950 ஞாயிறு காலை 8-மணிககு
ஆசிரியர் வேலாயுதம் பந்தலில்
(திருச்சி முருகன் டாக்கீசுக்கு அருகில்)
நடைபெறும்

தலைவர்:
தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள்
(நகரசபைத் தலைவர், கோவில்பட்டி)

துவக்கிவைப்பவர்:
தோழர் P. பழனிச்சாமி அவர்கள்
(பெத்தாம்பாளையம்)

தோழர்கள்:

C. N. அண்ணாதுரை M. A.	E. V. K. சம்பத்
இரா. நெடுஞ்செழியன் M. A.	K. V. K. சாமி
க. அன்பழகன் M. A.	K. K. நீலமேகம்
இரெ. இளம்வழுதி M. A.	M. S. இராமசாமி
பூ. கணேசன் M. A.	A. V. P. ஆசைத்தம்பி
இரா. இளஞ்செழியன் B.A.(HONS)	S. முத்து
K. A. மதியழகன் B. A.	இரா. சு. தங்கப்பழம்
N. V. நடராசன்	மு. கருணாநிதி
A. சித்தையன்	T. K. சீனிவாசன்
C. P. சிற்றரசு	M. S. சிவசாமி
S. K. சாமி	N. S. இளங்கோ
காஞ்சி. மணிமொழியார்	காஞ்சி. கல்யாணசுந்தரம்

தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்,
சென்னை சத்தியவாணிமுத்து
மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு
தோழர்கள்:
C. N. அண்ணாதுரை, K. R. இராமசாமி
மற்றும் பல தோழர்கள் நடிக்கும்

— "சந்திரமோகன்" —

நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம்:— வரவேற்பாளர் ரூ. 5—0—0.
பிரதிநிதி ரூ. 1—0—0. ரூ. 2—0—0 (உணவு உட்பட)
பார்வையாளர் ரு. 0—8—0

வரவேற்புக் குழுவினர்.

காமன்வெல்த் மாநாட்டின் குறிக்கோள் வெளியாகிறது

'தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆபத்து' விவாதிக்கப்படுமாம்

லண்டன், டிச. 26—

கொழும்பில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் விஷயம் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்படும் கம்யூனிஸ்டு ஆபத்தைக் குறித்ததான் இருக்கும் என்று, [illegible] வட்டாரங்களில் தெரிய வருகிறது.

இவ்விஷயம் [illegible] விவாதிக்கப்படும், எவ்விதமான முடிவுகளும் [illegible] படமாட்டா [illegible]. எனினும் இதில் கலந்துகொள்ளும் மந்திரிகளும், அவர்கள் உதவியாளர்களும் இங்கு விவாதிக்கப்பட்ட விஷயங்களை அவர்கள் சர்க்காருடன் கலந்தே முடிவு செய்யவேண்டியிருப்பதினால்தான்.

கம்யூனிச ஆபத்து பரவாமல் செய்தற்கான வழிகளில் ஒன்று மக்களின் வாழ்க்கைத்தரம் உயர [illegible] செய்ய வேண்டுமாதலால், [illegible] உதவித் [illegible] டம் மேற்கொண்டு ஒரு உதவித் திட்டம் தென்கிழக்கு ஆசியாவுக்குள்ள எற் [illegible]படலாம் என்று 'ஸண்டே அப்ஸர்வர்' அரசியல் நிருபர் கூறுகிறார்.

பலாத்காரத்துக்குப் பாதை வகுத்தவர்கள் காங்கிரஸ்காரர்களே!

அமைதியை நிலைநாட்டுவதே தி. மு. கழகத்தின் நோக்கம்

இடுக்கண்களுக்கிடையேயும் எங்கள் பிரசாரம் இடைவிடாது நடைபெறும்

மதுரையில் தோழர்கள் முத்து — ஆசைத்தம்பி — அப்பாவு

மதுரை, டிச. 24—

18—12—49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு, மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் கீழமாசிவீதி மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் நடைபெற்றது. கோவில்பட்டி நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமை வகித்து முகவுரையாகச் சில வார்த்தைகள் கூறிய பின் மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் பேசியதாவது:—

எஸ். முத்து

பகுத்தறிவியக்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள், சுமார் இருபது ஆண்டுகளாக இந்நாட்டில் நல்லறிவுப் பிரசாரம் செய்து வருகிறோம். அதிலும், திராவிட முன்னேற்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் மூன்று மாதங்களே ஆகின்றன என்ற போதிலும், இந்தச் சொற்ப நாட்களுக்குள் பிரசாரம் மிகவேகமாக நடைபெற்றுவருகிறது. மதுரையைப் பொறுத்த மட்டில், நான்குகூட்டங்கள் நடைபெற்றுவிட்டன. இந்நான்கு கூட்டங்களிலும் பொது மக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மதுரை மக்கள் அளித்து வரும் அமோக ஆதரவையும் பார்த்து, இங்குள்ள காங்கிரஸ் தோழர்களுக்குப் பொறுமை ஏற்பட்டுவிட்டது. அதன் பயனாக, இங்கு சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களையும் பலவாறாகத் தூஷித்துப் பேசியிருக்கிறார்கள். அதிலும் மதுரை ஜில்லாபோர்டு தலைவராக இருக்கும் தோழர் என். ஆர். தியாகராஜன் அவர்கள் பொறுப்பற்ற முறையில் பேசியிருக்கிறார்.

இதுதான் ஜனநாயகமா?

காங்கிரசையோ, காங்கிரஸ் சர்க்காரையோ பற்றி தி. மு. கழகத்தவர்கள் பேசினால் மதுரைமக்கள் அகிம்சையைக் கொஞ்சநேரம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பலாத்காரத்தைக் கையாண்டு, அவர்களை அடக்கிவிடவேண்டும் என்று கூறினாராம் [illegible] காங்கிரஸ்காரர்கள் [illegible] மிகவும் கீழ்த்தரமான முறையில் வசைமாரி பொழிந்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை. ஒரு பொறுப்புள்ள பதவியிலிருப்பவர், [illegible] ஜில்லாபோர்டு தலைவர் மட்டுமல்ல, ஜில்லா காங்கிரஸ் கமிட்டித்தலைவராகவும் இருப்பவர் வாய் கூசாது கூறுகிறார். தனது பொறுப்பை மறந்து பேசுகிறார்; பொதுமக்கள் எதிர்க்கட்சிக்கூட்டத்தில் பலாத்காரத்தைக் கைப்பிடியுங்கள் என்று. இது ஒரு பொறுப்புள்ள மனிதருக்கு அழகாகுமா? இதுதான் காங்கிரஸ்காரர் கூறும் ஜனநாயகமா? பலாத்காரத்தைக் கைப்பிடியுங்கள் என்று பகிரங்கமாகப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, இவர்கள் மீது சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது?

எதையும் வரவேற்கத் தயார்!

காங்கிரஸ்காரர்கூட்டம் போட்டால் ஐம்பது பேர்—நூறு பேர்தான் கூடுகிறார்கள். தி. மு. கழகக் கூட்டம் என்றால், பத்தாயிரக்கணக்கில் கூடுகிறார்கள். இதைப்பார்க்கும்போது அவர்களுக்கு, வயிற்றெரிச்சலாக இருக்கிறது. அதற்கு நாங்கள் என்ன செய்வது? காங்கிரஸ் மக்களிடம் செல்வாக்கை இழந்துகொண்டு வருகிறது. அதற்கு எங்கள்மீது பொறாமைப்படுவதில் அர்த்தமென்ன இருக்கிறது? மதுரை மக்கள் மாதிரி நிலைமையில் இப்போது இல்லை. எங்கள் மீது எதிரிகள் செய்யும் விஷமப் பிரச்சாரத்தை நன்றாக உணர்ந்துகொண்டார்கள். தி. மு. கழகத்தின் உண்மைக் கொள்கைகளை உணர்ந்து மக்கள் ஆதரவுதர முன்வந்துவிட்டார்கள். எத்தகைய பலாத்காரச் செயல்களினும் மக்களைத் தூண்டிவிட நினைப்பது முடியாத காரியமாகும். எதையும் நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் பலாத்காரவாதிகளல்ல. அமைதியாக எங்கள் பிரச்சாரம் நடந்தே தீரும். சென்ற கூட்டத்தில் தோழர் நெடுஞ்செழியன்பேசும்போது சில காலிகள் குழப்பம்செய்ய முயற்சித்தார்கள். பொது மக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. கூட்டம்முடிந்துவக்கணே [illegible] சாரம் சொல்லி முடியும்வரை ஒருவர்கூடகலையவில்லை. பொது மக்கள் என்றைக்கும் காங்கிரஸ்காரர்களின் ஏமாற்று வலையில் சிக்கிக்கொண்டேயிருப்பார்கள் என்று நினைப்பவர் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள் என்று பேசினர்.

எஸ். அப்பாவு

அடுத்தபடியாக தோழர் எஸ். அப்பாவு பேசியதாவது:

திராவிடமுன்னேற்றக் கழகம் நாட்டு மக்களுக்கு நலவறிவுப் பிரச்சாரம் செய்து வருகிறது. சமுதாயத் துறையில், உயர்வு தாழ்வுக் கொடுமைகளை ஒழித்து, நாம் யாவரும் மனிதர் என்று எண்ணும் மக்கட் பண்பை உண்டாக்கும் அரிய வேலையைச் செய்து வருகிறது. இதைக் கண்டு தேசியத் தோழர்கள் எங்கள் மீது ஆத்திரமடைய வேண்டிய அவசியமேயில்லை. திராவிட இனம் சுபிட்சமாக வாழ வேண்டும் என்பதே எங்கள் லட்சியம். இந்நாட்டின் நன்மைக்கான திட்டங்களுக்குப் பணம் கொடுத்து உதவ முடியாத வடநாட்டின் தொடர்பு, நமக்கு வேண்டாம் என்றே நாங்கள் கூறுகிறோம். நம் நாட்டின் வரிப்பணத்தை வடநாட்டாருக்குக் கொட்டிக் கொடுத்துவிட்டு, நமக்கு வேண்டிய செலவுக்கு வடநாட்டாரின் தயவை எதிர்பார்த்து வாழவேண்டியிருக்கிறது. நல்ல காரியங்கள் எதைச் செய்யவேண்டுமானாலும், அதற்குப் பணமில்லை என்றுகூறும் மத்திய சர்க்கார் வெளிநாடுகளிலுள்ள தூதுவர்களுக்காகவும், மற்றும் பல ஆடம்பரங்களுக்காகவும் பணத்தை வீணாக்குகின்றார்கள். இத்தகைய ஆட்சியின் கீழ் நாம் இருந்து வருவதில் நமக்கு நன்மை இல்லை என்றுதான் நாங்கள் கூறுகிறோம் என்றும் மற்றும் பல விஷயங்களை எடுத்து விளக்கிப் பேசினார்.

ஏ. வி பி. ஆசைத்தம்பி

அடுத்தபடியாக விருதைத் தோழர் ஏ.வி பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதாவது:—

நான் ஒரு சாதாரண மனிதன் என்பதோடு மிகவும் சின்ன ஆள் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர் முதல், சாதாரணக் காங்கிரஸ்காரன் வரை ஒவ்வொரு கூட்டங்களிலும் என் பெயரைக் கூறி என்னைத்தாக்கிப் பேசுவதின் மூலம், என்னைப் பெரிய ஆளாக்கி விட்டார்கள். உங்கள் ஊரிலுள்ள சில காங்கிரஸ்காரர், எந்தக் கூட்டத்தில் பேசினாலும் என்பெயரைச் சொல்லாமல் இருப்பதில்லை, அவர்கள் நடத்திய பத்திரிகையிலும் என்பெயர் வராத நாளே கிடையாது. அப்படியெல்லாம் எழுதியாவது தங்கள் பத்திரிகையை நடத்த முடியுமாவென்று பார்த்தார்கள், மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை, மூடு விழா நடந்துவிட்டது. தி. மு. கழகத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு அதிகமாகக் கிடைப்பதையும், கூட்டங்களுக்கு அதிகமான ஆட்கள் வருவதையும் கண்டு பொறாமைப்படுகிறார்கள். இதற்கு யார் காரணம்? தி. மு. கழகத்தினர் மிகவும் நன்றாகப் பேசுவார்கள், அவர்கள் வார்த்தைகளைக் கேட்டு பொது மக்களே மயங்கிவிடுகிறார்கள் என்று மந்திரிகள் உள்பட எங்களைப்பற்றி ஒவ்வொரு கூட்டங்களிலும் விளம்பரம் செய்கிறார். அதனாலேயே எங்கள் பேச்சைக் கேட்க மக்கள் ஆவலுடன் வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் பலாத்காரத்தைக் கையாளும்படி மதுரை ஜில்லாபோர்டு தலைவர் கூறியதாக தோழர் முத்து கூறினார். ஏன் அவ்வாறு கூறவேண்டும்? நாங்கள்தான் நேர்தலில் நிற்கக், கலகம் செய்வதில்லை யென்று கூறிவிட்டோம். அப்படியிருக்க ஏன் எங்களைக் கண்டு பயப்பட வேண்டும்? பலாத்காரத்தைக் கையாளுங்கள் என்று காங்கிரஸ்காரர்கள் கூறுவதனால், கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தைக் கையாண்டார்கள் என்று குற்றம் சாட்டுவதற்குக் காங்கிரஸ்காரர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? கம்யூனிஸ்டுகளுக்குப் பலாத்காரத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தானே! ஆகஸ்டு கலவரத்தில் தண்டவாளத்தைப் பெயர்த்தீர்கள், தந்திக் கம்பியை அறுத்தீர்கள், தபால் பெட்டியில் நெருப்பு வைத்தீர்கள். அதே பாடத்தைத் தானே அவர்களும் படிக்கிறார்கள். நீங்கள் அக்காலத்தில் போலீஸ் அதிகாரிகளை கொலை செய்யவில்லையா? அக்கினித் திராவகத்தை ஊற்றவில்லையா? நீங்கள் கற்றுக் கொடுத்த பாடத்தைத்தான் கம்யூனிஸ்டுகள் செய்கிறார்கள். நீங்கள் செய்யும்போது நாங்கள் உங்களை கண்டித்தோம். இன்று அவர்கள் செய்யும் போது அவர்களையும் கண்டிக்கிறோம். கம்யூனிஸ்டுகள் பலாத்காரம் செய்கிறார்கள் என்று அவர்களைக் கண்டிக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் பலாத்காரத்தைக் கையாளுங்கள் என்று மேடையில் கூறுகிறீர்கள். உங்களிடத்தில் என்ன யோக்கியம் இருக்கிறது? போலீஸ்காரர்கள் இந்த நாட்டுக்கு அரண் என்றும், எங்கள் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் நாட்டின் அமைதியைக் காக்கும் கடமை அவர்களிடம் இருக்கிறது என்றும் நாங்கள் கூறினோம். நீங்கள் போலீஸ்காரர்களை நாய்கள் என்றும், பேய்கள் என்றும் இழித்துக் கூறினீர்கள் அன்று. இன்று ஏன் அவர்களை உங்கள் பின்னாலேயே கூட்டித் திரிகிறீர்கள்? காங்கிரஸ்காரர்களின் செல்வாக்குக் கரைந்துகொண்டே வருகிறது; தி. மு. கழகம் வளர்ந்துகொண்டே வருகிறது. இதைக்கண்டு பொறாமைப்படுவதில் பயனில்லை. பொது மக்கள் இனியும் ஏமாற மாட்டார்கள். என்று மிக விரிவாகப் பேசினார்.

பின்னர் தலைவர் முடிவுரையாக சுமார் அரைமணி நேரம் காங்கிரஸ்காரரின் தப்புப் பிரச்சாரம் பற்றியும், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும் பேசினார். இரவு 9-30 மணிக்குக் கூட்டம் தோழர் முத்து அவர்கள் வந்தனோபசாரம் கூறி முடியும்வரை நடந்திருந்து கலைந்தது. இடையில் சில விஷமிகள் கூட்டத்தில் குழப்பம் உண்டு பண்ண முயற்சித்தும் ஒன்றும் பலிக்கவில்லை. பாம்பு ஒன்றைப் பிடித்து மதுரை முனிசிபல் காங்கிரஸ் கவுன்சிலர் ஒருவருக்குச் சொந்தமான ஜீப் கார் தபாலில் வந்திருந்த ஒரு பீஸ் கவரில் வைத்து மடித்து, விஷமி ஒருவன் கூட்டத்தில் வீசி யெறிந்து ஓடிவிட்டான். அதை நம் தோழர்கள் பிடித்து கவரோடு மேடைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். பாம்பு மேடைக்குக் கொண்டுவரப்பட்டு மேடையில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிறகுதான், பொதுமக்கள் அறியும்படியான அளவுக்கு ஒரு சிறு சலசலப்புகூட இல்லாத நிலையில் நம் தோழர்கள் பாம்பைப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டது குறிப்பிடத் தக்கதாகும். கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தும், கூட்டம் முடிந்து வந்தனோபசாரம் கூறி முடியும் வரை, விஷமிகளின் செயலுக்குச் சிறிதும் இடங்கொடுக்காமல் பொதுமக்கள் அமைதியுடன் இருந்தது மட்டுமல்லாமல், கூட்டத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை, தங்கள் ஆரவாரத்தையும் உற்சாகத்தையும் தெரியப்படுத்தி, ஆதரவு கொடுத்தது பாராட்டத் தக்கதாகும். கடந்த இரண்டு கூட்டங்களிலும் காங்கிரஸ் காலிகள் நடந்துகொண்ட இழிவான முறையினால் அவர்களது ஒழுக்கத்தை மக்கள் அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. (நி-உ)

ரஷ்யாவும் சீனாவும்

இரண்டுக்குமிடையே உறவு எப்படி?

லண்டன், டிச. 26—

கம்யூனிஸ்ட் சீனா, ரஷ்யா [illegible] நாட்டின் ஒரு [illegible] ஒன்று ஏகதிபத்யமா, அல்லது ரஷ்யாவுடன் சரிசமான அந்தஸ்துள்ளதாக இருக்குமா என்பது இன்னும் தெளிவாக எதுவும் தெரியவில்லை என்று இங்கு கூறப்படுகிறது.

கிரெம்ளினில் மாசேதுங்கிற்கு அளித்த வரவேற்பில், இதர ரஷ்ய ஆதிக்க நாடுகளைப்போல் சீனா நடத்தப்படவில்லையாம். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோஷலிச பாதையில் முன்னேறுகிறது என்று சொல்லப்பட்டதே ஒழிய, அதில் சீனா சேர்க்கப்படவில்லை.

மாசேதுங் மாஸ்கோவில் செய்த சொற்பொழிவு, ரஷ்யாவுக்கு சமதையான நாட்டின் தலைவர் பேசும் தோரணையிலிருந்தே தொழிய, ரஷ்யாவு கட்டுப்பட்ட நாட்டின் தலைவர் செய்யும் பிரசங்கம் போல் இல்லை என்று கூறப்படுகிறது.

சுமேரிய நாகரிகம் பற்றி மேலும் தகவல்கள்

நியூயார்க், டிச 26—

மிக மிகப் பழமையானது என்று கருதப்பட்டு வரும் சுமேரிய நாகரிகம் பற்றிய தகவல்கள் இப்பொழுது பிலடெல்பியாவில் பென்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானிகள் செய்துவரும் ஆராய்ச்சியின் மூலமாக வெளியாகும் என்று தெரிகிறது.

பபிலோனியன் காலத்திற்கு முன் தழைத்ததாகக் கூறப்படும் சுமேரிய நாகரிகம் யூப்ரேடிஸ் டைக்ரிஸ் நதிகளின் மத்தியக் கிழக்கில் [illegible] பிரதேசத்தில் இருந்ததாக தெரிய வருகிறது. இப்பிரதேசமே இன்று [illegible] என்று வழங்கப்படுகிறது.

மத்திய சர்க்காரைத் திருப்திபடுத்தினுல் மட்டும் போதாது

—(0)—

மாகாண என். ஜி. ஓ. க்களின் நிலை உயர வழி கோலுக !

—:(0):—

ஆட்சியாளருக்கு சென்னை என் ஜி. ஓ. க்கள் அறிவுரை

"ராணுவச் சிப்பந்திகள், நீதி நிருவாகத்தினர், மத்திய சர்க்கார் வேலையில் உள்ளவர்கள் ஆகியோரை மட்டும் திருப்திகரமான நிலைமையில் வைத்திருந்தால் போதாது என்பதை, நான் மத்திய, மாகாண சர்க்கார்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாகாணங்களில் குறிப்பாக தென்னிந்தியவில் கீழ் வகுப்பு சிப்பந்திகளின் உத்தியோக காலத்தை நிலையானதாகச் செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்காவிடில், ஐக்கிய இந்தியாவை அமைக்கும் பணி பாதிக்கப்படும். சிப்பந்திகள் விஷயத்தில் அனுதாபமுண்டு; ஆனால் பணமில்லையே என்று மாகாண சர்க்கார்கள் கூறி ஆறுதல் அளிக்க முயல்வதால் பயனில்லை"

என்று அண்மையில் நடைபெற்ற செஜ . பதவியில்லாத உத்தியோகஸ்தர்கள் சங்க கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய தோழர் எம் ஏ. ராமகிருஷ்ணனால் குறிப்பிட்டிருக்கிறார்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சென்னை மாகாண செஜ. பதவியில்லாத உத்தியோகஸ்தர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதையும், அது முறிந்து போன விதத்தையும் வாசகர்கள் அறிவர். அந்த வேலை நிறுத்தத்திற்கு பிறகு, தற்போது தான் செஜ. பதவியில்லாத உத்தியோகஸ்தர் சங்கம் புத்துயிர் பெற்று எழ ஆரம்பித்திருக்கிறது. இச்சங்கத்தின் இன்றைய நிலைக்கும் அன்றைய நிலைக்கும் அளவற்ற வேற்றுமைகள் உண்டு. அன்றிருந்த சங்கம், ஏறக்குறைய ஒரு தொழிற் சங்கத்தின் நிலைமையையே ஒத்திருந்தது. அரசியலாரும் அதனைக் கண்டு அஞ்ச வேண்டிய அளவுக்கு அச்சங்கம் சுயேச்சையாக வேலை செய்து வந்தது. ஆனால், அதே சங்கத்தின் தற்போதைய நிலை அப்படியல்ல. சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாக என் ஜி ஓக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. ராஜ விசுவாசப் பிரமாணம் செய்த கெண்டு பணியாற்ற முன் வந்துள்ளது இச்சங்கம். இதனைத் தோழர் ராமகிருஷ்ணனாலே தனது சொற்பொழிவின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சொல்லுகிறார்,

"இதுவரை நடைபெற்று இருந்திராத அவ்வளவு நெருக்கடியில் சிவகத்தை இன்று சந்தித்து வரும் சர்க்காரின் பளுவைக் குறைக்க என். ஜி ஓக்கள் விஸ்வாசத்துடனும், பொறுமையுடனும் நடவடிக்கைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று, என். ஜி ஓக்கள் அரசியலாருக்கு நல்ல பிள்ளைகளாக நடக்க விரும்புகின்றனர் என்பதற்கு இதைவிட வேறென்ன எடுத்துக் காட்டு தேவை?

இவ்வளவும் ஆட்சியாளர் அறிவார். மேற்படி என் ஜி ஓக்கள் முயன்றபோதிலும், இன்றைய அவர்களின் பற்றிக்கொண்டிருக்கும் வறுமையின் கொடுமை அவர்களையும் அநியாயமாய் பேசச் செய்கிறது.

சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் வழங்கும் முறையில், மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரு விதம், மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரு விதம் என்ற முறை இருந்து வருகிறது. ஒரே இடத்தில் வேலை பார்க்கும் இரண்டு சிப்பந்திகளுக்குள் இத்தகைய வேற்றுமை காட்டப்படுவது மிக மிக வருத்தத்தக்கது. இதைத்தான் தோழர் ராமகிருஷ்ணனால் சுட்டிக் காட்டிக் கேட்கிறார். ஏன் இந்த ஏற்றத் தாழ்வு முறை என்று. அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட உயர்வு தாழ்வு ஐக்கிய இந்தியாவுக்கே ஆபத்தை உண்டுபண்ணும் என்கிறார்.

எனவே, இப்படிப்பட்ட நிலைமாறி, மத்திய சர்க்கார் சிப்பந்திகளும், மாகாண சர்க்கார் சிப்பந்திகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காருக்கு மதிப்பு தர வேண்டும் என்ற மனப்பான்மை அகல வேண்டும்.

என். ஜி ஓக்களின் பொறுப்பு மிக மிக பெரிது. அவர்கள் அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் இதனை என். ஜி. ஓக்கள் கூட்டத்துக்குத் தலைமை வகித்த முதலமைச்சர் குமாரசாமியாரே ஒப்புக் கொள்கிறார். அப்படிப்பட்ட முதுகெலும்புகளில் பாரபக்ஷம் காட்டவேண்டா. அவர்களை வறுமை என்னும் நோய்க்கிருமிகள் அரிக்கவே இடந்தலாகாது.

என். ஜி ஓக்கள் எவ்வளவு நான் சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாக நடக்க முயன்றாலும், வறுமையின் கொடுமை அவர்களை வாளாயிருக்கச் செய்யாது.

"சிப்பந்திகள் விஷயத்தில் அனுதாபம் உண்டு. ஆனால், கொடுப்பதற்குத்தான் பணமில்லை. என்று கூறி ஆறுதல் அளிக்க முயல்வது பயனளிக்காது" என்று தோழர் ராமகிருஷ்ணன் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. எனவே, மாகாண என். ஜி ஓக்களுக்கும், மத்திய என். ஜி ஓக்களுக்கும் சம்பள விஷயத்திலுள்ள வேற்றுமையை விலக்க வேண்டுவது அரசியலாரின் முதற் கடமையாகும். அடுத்தபடியாக ஷெ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதுபோல், என். ஜி ஓக்களின் பஞ்சப்படியை வாழ்க்கைத்தர புள்ளிக்குத் தக்கபடி அதிகரிக்கவோ, அல்லது 1941-ல் இருந்த விலைக்குப் பொருள்களைக் கிடைக்கச் செய்யவோ வழி வகைகளைக் காண வேண்டியது அரசியலார் கடனாகும்.

"நிருபர்களுக்குத் தகவல் தராதே"

மலான் சர்க்கார் கெடுபிடி

கேப்டவுன், டிச. 26—

பத்திரிகை நிருபர்களுக்கு எவ்வித தகவல்களையும் கொடுக்கக் கூடாதென்று மலான் சர்க்காரின் மந்திரிகள், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

செய்திகளை அதிகாரிகளிடமிருந்து பெறுவது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது என்று தென்னாப்பிரிக்க சர்க்கார் வட்டாரத்துடன் தொடர்பு கொண்டுள்ள நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

கமிட்டிகள் மாநாடுகள் இவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் 'செய்திகளை வெளியிடாதே' என்ற உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

வெள்ளையர்களே வெளியேறுகிறார்கள்!

தென்னாப்பிரிக்காவிலிருந்து வெள்ளையர்களே அதிகமாக வெளியேறுகிறார்கள் என்று, சமீபத்தில் சர்க்காரே தயாரித்த புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது மாதத்திற்கு சுமார் 600 பேர் வெளியேறுகிறார்கள் என்றும், இவர்களில் பலர் தொழிலில் சிறந்த வல்லுநர்கள் என்றும் தெரிகிறது

ஸ்மட்ஸ் ஆட்சியில், ஐரோப்பாவிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும், அதிகமாக வெள்ளையர் வந்து குடியேறுவது ஆதரிக்கப்பட்டது. ஆனல் மலான் பதவிக்கு வந்ததும் இக்கொள்கையை மாற்றிவிட்டார்.

புதுக்கோட்டையில்

★ சந்திரமோகன் ★

30-12-49 வெள்ளியன்று

பிரகதாம்பாள் தியேட்டரில்

இரவு 9-30 மணிக்கு நடைபெறும்

தோழர் சி. என். அண்ணுத்துரையும்,

அவரது குழுவினரும் நடிப்பார்கள்

டிக்கட் விவரம் பின்னல்

போகிற போக்கில்...!

"ஓமகுண்டம், வேத பாராயணங்களுடன் ஹிந்து மகாசபை மாநாடு ஆரம்பம்! 'ஜெய்' கோஷத்துடன் ஆரம்ப விழா பிரசங்கம் முழுயுமுன் ஒத்திவைப்பு"

—செய்தித்தலைப்பு

சிமக்கைப் பார்க்காமல் ஒரு இருபது ஆடுகளையும ஜெயிட்டு தேவதைகளைத் திருப்தி படுத்தியிருக்கால், இச்சில்லறை விக்னம் (கோளாறு) நேரிட்டிராதென அபிப்பிராயப்படுகிறார், தெய்வங்களைத் தினம் தினம் சந்தித்துப் பேசும் தீட்சைபெற்ற கிரோன்மணி யொருவர்!

* * *

"பிரதேச பாஷையின் ஸ்தானத்தை ஆக்ரமிக்கும் நோக்கமில்லை"

"தேசிய பாஷையின் நிலைமை பற்றி ராஜன்பாபு"

—செய்தித்தலைப்பு

நோக்கமிருந்தாலும் முடியாதே! இரண்டு மூன்று வரிகளிலேயே நோக்கமில்லை நிலைமைப்பற்றி என்ற இரு தொடர்களைத் தவிர, ஏனைய ற்றைத்தான் தேவ பாஷை சமஸ்கிருதம் சிலர் ஹிந்து ஆக்ரமித்துக் கொண்டதே' என வையாண்டி செய்கிறார் தேசப்ரீதியும் பாஷாபிமானமும் விசாலப் புத்தியம் ஏகமாயுள்ள பாரத புத்திரரொருவர்!

● ● ●

'காந்திஜியின் புதல்வர் ஸ்ரீ மணிலால் காந்தி 23-ந் தேதி இரவிலிருந்து 7 நாள் உபவாசம் ஆரம்பித்திருக்கிறார்.

—செய்தி

புலிக்குப்பிறந்தது பூனையாகுமா?

"அனுபவமற்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைப்பது பெரும் ஆபத்து."

—சி. ஆர்

இதை சொல்லித்தானு சாமி தெரிந்துகொள்ள வேண்டும்! கண் கூடாகவேதான் பார்த்து வருகிறோமே!

● ● ●

'இந்திய சர்க்காரை அனுபவமும், அறிவும் முதிர்ந்த தலைவர்கள் நடத்திவருவது நம் அதிஷ்டமே'

—சி. ஆர்.

அந்த அதிர்ஷ்ட தேவதை நீடூழி வாழ்! சீனு, பர்மா, மலேயா போன்ற துர்பாக்கிய நாடுகளுக்கு நமது இஷ்ட தேவதை ஓடியேறிப்போய் விடாமல், இந்தியாவிலேயே ஒரு நல்ல இடத்தில் பெரிய மாளிகைபொன்று பார்த்து அதில் 'குடிக்கனம்' வைத்துவிடுவது நல்லது முப்பது முக்கோடி தேவர்கள், கின்னர் கிம்புருடர் இத்தியாதிகளுக்கே சொந்தமான தெய்வங்களையும் மாளிகையைச் சுற்றிக் காவல் புரிய உத்தரவிடுமாறு மும்மூர்த்திகளைக் கோரி தவம் தொடங்கவும் இதுவே தக்க சமயம்!

சுரண்டல் எந்த ரூபத்திலிருப்பினும் அதை ஒழிக்க வேண்டும்.

— ராஜேந்திர பிரசாத்

கைலையங்கிரி எம்பெருமானின் பிரதிநிதிகளாய், புனூலணிமார்பராய், விபூதி ருத்திராக்ஷ சமேதராய். பஞ்சகச்சம் — கமண்டலம்— பஞ்சாங்கம்— தர்ப்பையேந்தி வந்தால் கூடவா?

மணங்கமழும் புத்தகம்

நியூயார்க், டிச. 26—

இயற்கை வனப்பு பற்றிய தகவல்களை வெளியிடும் அமெரிக்கப் பத்திரிகையொன்றைத் திறந்தாலே 'லைன் மரத்தின்' இனிமையான மணம் வெளிக் கிளம்புகிறதாம் அச்சடிக்கும் மையின் அருவருப்பான நாற்றத்தை அளிப்பதை தவிர்க்க இவ்வியுடன் வாசனையை சேர்த்து இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறதாம். புத்தகம் திறந்து கிடந்தால், ஒருவாரம் மட்டுமே இவ்வாசனை இருக்குமாம். மூடி வைத்திருந்தால் அதிக காலம் வாசனை இருக்குமாம்.

—குளோப்

அறிவிப்பு

"மாலை மணி"யில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் திருமணம், பிறப்பு, பெயரிடல், மறைவு, நன்றி அறிவிப்பு ஆகியவை பற்றின செய்திகள் யாவும் இனி விளம்பரமாகவே ஏற்றுக்கொள்ளப்படும். இவைகளுக்கு மட்டும் விளம்பரக் கட்டணம் ஒரு பத்தி, ஓர் அங்குலத்திற்கு ரூ 2.

(ஆ-ர)

நோபிள் பரிசு வல்லுநர்



ரசாயன நூல் ஆராய்ச்சித் துறையில் 1949 ம் ஆண்டுக்கான நோபிள பரிசைப் பெற்ற டாக்டர் வில்லியம் எப். கியாக்கியு (54). இவர் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் பௌதிக ரசாயனக் கல்வித் துறை பேராசிரியராவார். தட்பவெப்பத்தை 0 டிகிரிக்கும் கொண்டுவரக் கூடிய—இதற்கு முன் கண்டறியாத முறைதனை இவர் கண்டுபிடித்துள்ளார்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் சந்தா கட்டணங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆக்கிரமிக்கும் நோக்கமில்லை; ஆனால் கட்டாய பாடமே!

பவனி வரும் பாபு ராஜேந்திரரின் பசப்பு மொழி!

"மாகாணங்களுக்கிடையே உறவு இருந்துவருவதற்காகவே தேசிய பாஷை உத்தேசிக்கப்பட்டது. பிரதேச பாஷைகளின் ஸ்தானத்தை அது பற்றிக் கொள்ள வேண்டுமென்ற உத்தேசமில்லை"

என்று, சென்னையில் மாணவர்களுக்கிடையே பேசுகையில் தோழர் ராஜேந்திர பிரசாத் கூறியிருக்கிறார்.

பாபு ராஜேந்திர பிரசாத்தின் இத்தகையபோக்கு சமரசப்பேச்சை நாம் ஓரளவுக்கு வரவேற்கிறோம். ஏனெனில், பிரதேச பாஷைகளின்மீது ஆதிக்கம்செலுத்தும் நோக்கம் இல்லை என்று சொல்லியிருக்கிறார். இது, மொழிப்போரின் காரணமாக இம் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் எழுச்சியின் எதிரொலி என்றே சொல்ல வேண்டும். தோழர் ராஜேந்திரர் கொஞ்சம் உணர்ந்து கொடுத்துப் பேசுகிறார். ஆனால் இவரது பேச்சைக் கேட்டு திராவிடர் மகிழவோ, மயங்கவோ மாட்டார்கள் என்பது திண்ணம். ஏனெனில் எவ்வளவு பக்குவமாகப் பேசினாலும், பேச்சின் அடிநாதத்தில் வடவர் ஆதிக்கக் கருத்து ஆழ்ந்து கிடக்கிறது. அவர் மேலும் பேசுகையில் குறிப்பிடுகிறார்.

"உயர் நிலைப்பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இந்தியைக் கட்டாயபாடமாக வைப்பதுதான் சிறந்த ஏற்பாடாகும்" என்று.

இது எதைக் காட்டுகிறது? தோழர் ராஜேந்திரர் சமரசபேச்சில் பிரதேச பாஷைக்கு முக்கியத்வம் தரப்படவேண்டுமென்று காணப்படினும், 'கட்டாய'த்துக்கே முதலிடம் தரப்படுகிறது.

இது மிகமிக ஆபத்தானது, எப்பொழுது 'கட்டாயம்' என்ற சொல் இடம் பெற்றதோ அப்பொழுதே இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது. இன்னும் கட்டாயத்தின் மூலம் பிறமொழி ஆதிக்கம் இந்நாட்டில் நுழைவதைத்தான் நாம் பலமாக எதிர்க்கிறோம்.

எனவே, உண்மையிலேயே இந்தி மொழி மாகாணங்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்ற எண்ணம் தோழர் ராஜேந்திரர் போன்ற தலைவர்களுக்கு இருக்குமானால் 'கட்டாயம்' என்ற பேச்சையே எடுக்கக் கூடாது. இஷ்டபாடம் என்ற அளவிலே இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யட்டும். 'கட்டாயம்' என்ற சொல்லைத் தொனிக்க திராவிடரின் சுயமரியாதையைப் பாதிப்பதாகும். இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதைத் திராவிடர் எதிர்ப்பதற்கு அடிப்படைக் காரணமே இதுதான். ஆகவே தென்னாட்டில் பவனிவரும் பாபு ராஜேந்திரர் இதனை மனதிலிருத்தி ஆவன செய்வாராக.

வானொலி

(28-12-49 புதன்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 வி. என். கௌசல்யா, கே. வி. கே. மணி இரு வீணைகள்
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 ஏ. சௌரிகுட்டி—பாட்டு

பிற்பகல் :

12-30 சி. எஸ். பாலசுப்பிரமணிய ஐயர்—வயலின்
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்

மாலை :

4-00 ஜி. வி. செல்லம்மாள்—பாட்டு
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 எஸ் ஜயலட்சுமி—பாட்டு

இரவு :

7-00 பி. சரோலட்சுமி—வீணை
7-15 தமிழில் செய்திகள்
7-30 ஏ. ஜார்ஜ்ரோஸ்—கிளாரினெட்
7-45 டி. எஸ். எஸ். ராஜன்—பேச்சு
8-00 இசை விழா (ஒலிப்பதிவு)
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 வயலின் (அ. இ. ரே. வி.)
9-30 இசை விழா (ஒலிப்பதிவு)
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. எஸ். வெங்கட்டாசலம் பிள்ளை—வயலின்
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 ரேடியோ வாத்யகோஷ்டி
8-50 கே. எஸ். பத்மினி-பாட்டு

பிற்பகல் :

1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 கே. எஸ். பத்மினி—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 எம். ஏ. வேணுகோபால்—பாட்டு

மாலை :

5-00 டி. எஸ். வெங்கடாசலம் பிள்ளை—வயலின்
5-30 சென்னையில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 எம். ஏ. வேணுகோபால்—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-45 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலப் பேச்சு
9-30 சென்னையில் உள்படி
10-0? முடிவு.

வரவேற்புக் குழுக் கூட்டம்

28—12—49 புதன் கிழமை மாலை 6-மணிக்கு "மாலை மணி" அலுவலகத்தில் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கே. கோவிந்தசாமி,
ஏ. எஸ். ராமன்,
செயலாளர்கள்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை :—

சீயாழி
அம்பாசமுத்திரம்
திருமலைராயன்பட்டினம்,
பல்லாவரம்,
சிருத்தாநெல்லூர்,
சங்கரன்கோயில்
(மையனூர்)
மங்கநல்லூர்
மழுசாபுரம்
விளாத்திகுளம்
சேந்தமங்கலம்
ஓமலூர்
தனுஷ்கோடி
ஆயந்தூர் (மதுரை)
சத்தியவேடு
பரபாநாடு
நாகலாபுரம்
ஈரோடு

நிர்வாகி : "மாலை மணி"
சென்னை.

பழையன ஒழித்து, புதியன அளிக்க
பொங்கலன்று
வெளிவருகிறது !

சங்குநாதம்
திராவிட முன்னேற்ற வாரஇதழ்
ஆசிரியர் குழு:—
பொ. சுவாமிநாதன், மதுரைமன்னன், க. சி. வலியபெருமாள்

எங்கும் ஏஜண்டுகள் தேவை
விவரங்கட்கு :— நிர்வாகி,
'சங்குநாதம்' அலுவலகம்,
166, வடக்குமாசி வீதி, மதுரை.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

★

15-1-50 ஞாயிற்றுக்கிழமை

★

தலைவர்: **சேலம் ஏ. சித்தையன்** அவர்கள்

★

இரவு சி. என். ஏ. நடிக்கும் நாடகம் நடைபெறும்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.